செ.வெ.எண்: 71/ஜூன் நாள் : 30.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இந்திய இராணுவத்திற்கான ஆள்சேர்க்கை முகாம் வருகின்ற ஆகஸ்ட் 2-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் இந்திய இராணுவத்திற்கு ஆள் சேர்க்கைக்கான சென்னை மண்டல தலைமையகம் சார்பாக, வருகின்ற ஆகஸ்ட் 2-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை இந்திய இராணுவத்திற்கான ஆள் சேர்க்கை முகாம் நடைபெறவுள்ளது.

இந்திய இராணுவத்திற்கு ஆள் சேர்க்கைக்கான சென்னை மண்டல தலைமையகம் சார்பாக,இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் வருகின்ற ஆகஸ்ட் 2-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை இந்திய இராணுவத்திற்கான ஆள் சேர்க்கை முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் தமிழ்நாட்டில் உள்ள பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்தூக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் காரைக்கால், பாண்டிச்சேரி (யூனியன்) ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவத்தின் சிப்பாய் (Technical) , சிப்பாய் நர்சிங் அசிஸ்டெண்ட், சிப்பாய் (பொதுப்பணி) , சிப்பாய் (தொழில்நுணுக்கம் அறிந்தவர்), சிப்பாய் கிளார்க் ஸ்டோர் கீப்பர் (டெக்னிக்கல்) மற்றும் DSC ஆகிய பிரிவுகளுக்கான ஆள் சேர்க்கை தேர்வு நடைபெறவுள்ளது.

இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் 18 ஜூன் 2016 முதல் 17 ஜூலை 2016 வரை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பிறகு அதில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு தாங்கள் எந்த பிரிவுக்கு தகுதியுள்ளவர்கள் என்பதை அறிந்து விண்ணப்பிக்க வேண்டும். சான்றிதழ் சரிபார்க்கும் நாள், உடற்தகுதித் தேர்வு மற்றும் மருத்துவ பரிசோதனை போன்றவைகள் முகாம் நடக்கும் இடத்தில் மேற்கொள்ளப்படும். இந்த விவரங்கள் அழைப்புக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்படும். அழைப்புக் கடிதம் 17 ஜூலை 2016 தேதிக்கு மேல் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அழைப்புக் கடிதத்தின் பிரதி எடுத்து அதில் குறிப்பிட்டுள்ள நாளில் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி மைதானத்திற்கு வரவேண்டும்.

மேற்கண்டவாறு திருச்சியில் உள்ள இந்திய இராணுவ ஆள் சேர்ப்பு அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**